கைது செய்யப்பட்டுள்ள தமிழ்நாட்டு மீனவர்களையும், படகுகளையும் விடுவித்திட வேண்டும்!

தமிழ்நாட்டு மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் இந்தியப் பிரதமரிடம் - இலங்கை அதிபர் பேச்சு நடத்தியது வரவேற்கத்தக்கது!

முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

சென்னை, டிச. 17-

இலங்கை அதிபர் அனுர குமார திசநாயக்கே அவர்கள், பிரதமர் நரேந்திர மோடி அவர்களுடன் தமிழ்நாடு மீனவர்களின் பிரச்சினைகளுக்கு மனித நேயத்தின் அடிப்படையிலும் அமைதி வழியிலும் தீர்வு காண்பது குறித்தும், மோதலைத் தவிர்ப்பதை வலியுறுத்தியும் பேச்சு வார்த்தை நிகழ்த்தியது வரவேற்கத்தக்கது என்றும்; கைது செய்யப்பட்டுள்ள தமிழ் நாட்டு மீனவர்களையும், படகுகளையும் விடுவிப்பதையும் பரிசீலிக்க வேண்டும் என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப் பதிவு வருமாறு:

இலங்கை அதிபர் அனுர குமார திசநாயக்கே அவர்கள் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுடன் தமிழ்நாட்டு மீனவர்களின் பிரச்சினைகளுக்கு மனிதநேயத்தின் அடிப்படையிலும் அமைதி வழியிலும் தீர்வு காண்பது குறித்தும், மோதலைத் தவிர்ப்பதை வலியுறுத்தியும் பேச்சு வார்த்தை நிகழ்த்தியது வரவேற்கத்தக்கது.

இந்நிலையில், அனுர குமார திசநாயக்கே அவர்கள் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளதமிழ்நாட்டு மீனவர்களை விடுதலை செய்வதையும், பிடித்து வைத்துள்ள அவர்களது படகுகளை விடுவிப்பதையும் பரிசீலிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அத்தகைய நடவடிக்கை இந்தப் பேச்சு வார்த்தைகளில் நம்பிக்கையை விதைப் பதுடன், நமது இரு நாடுகளுக்கிடையே யான வலுவான உறவுக்கும் அமைதியான எதிர்காலத்துக்கும் வழிவகுப்பதில் ஆக்கப் பூர்வமான நகர்வாக அமையும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.12.2024) முரசொலி நாளேட்டின் தணிக்கையாளர் சிவசுப்பிரமணியன் அவர்களின் சென்னை, மேற்கு மாம்பலத்திலுள்ள இல்லத்திற்கு நேரில் சென்று, உடல்நலக்குறைவால் காலமான அவரது தந்தை தியாகராஜன் அவர்களின் உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். இந்நிகழ்வின்போது, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, சட்டமன்ற உறுப்பினர் த.வேலு ஆகியோர் உடனிருந்தனர்.

பள்ளிக் கல்வித்துறை அலுவலர்கள் – ஆசிரியர்கள்

ஒருங்கிணைந்து செயல்பட்டால் பல்வேறு சாதனை மாணவர்களை உருவாக்க முடியும்!

முதன்மை கல்வி அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பெருமிதம்!

கோவை, டிச.17-

கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர், பாப்பம்பட்டி பிரிவு, கலைஞர் கருணாநிதி பொறியியல் கல்லூரியில், நேற்று (16.12.2024) அனைத்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்களுக்கான மாநில அளவிலான இரண்டு நாள் பணிஆய்வுக் கூட்டம் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பள்ளிக் கல்வித் துறை முதன்மை செயலாளர் திருமதி.சோ. மதுமதி, தமிழ்நாடு மாதிரி பள்ளிகளின் உறுப்பினர் செயலர் ஆர்.சுதன், மாவட்ட ஆட்சித்தலைவர் கிராந்தி குமார் பாடி, மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன், முன்னாள் அமைச்சர் / கலைஞர் கருணாநிதி பொறியியல் கல்லூரியின் நிறுவன தலைவர் பொங்களூர் நா.பழனிச்சாமி, பள்ளிக்கல்வி இயக்க இயக்குநர்கள் மரு.எஸ்.கண்ணப்பன், பழனிசாமி, நரேஷ், குப்புசாமி, மாநில கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி (SCERT) இயக்குநர் திருமதி. உமா, மாநில கூடுதல் திட்ட இயக்குநர் (சமக்ரா சிக்ஷா திட்டம்) திருமதி.உமா, அரசு தேர்வுத் துறை இயக்குநர் திருமதி.லதா, பள்ளிக்கல்வித் துறை இயக்குநர்(ஒய்வு) அறிவொளி, கலைஞர் கருணாநிதி பொறியியல் கல்லூரியின் துணைத்தலைவர் திருமதி.இந்து முருகேசன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி பேசியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பள்ளிக்கல்வித்துறையில் பணியாற்றும் அலுவலர்களுக்கான பணி ஆய்வுக்கூட்டத்தை தொடங்கி வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ்நாடு முதலமைச்சர் பள்ளிக்கல்வித்துறைக்கு பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். புதுமைபெண் திட்டம், காலை சிற்றுண்டி திட்டம், தமிழ்புதல்வன் திட்டம் என எண்ணற்ற திட்டங்களை சிறப்பாக அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கல்வியையும், சுகாதாரத்தையும் தனது இரண்டு கண்களாக பார்க்கின்றார்கள். அனைவரும் இணைந்து ஒரு சிறந்த கல்வி கட்டமைப்பை உருவாக்கி கொண்டு இருக்கிறோம். பள்ளிகளில் மாணவர்களின் கற்றல் கற்பித்தல் திறனை மேலும் மேம்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை பள்ளிக் கல்வித் துறை மேற்கொண்டு வருகின்றது.

அரசின் சார்பில் பள்ளிக் கல்வித் துறையில் கொண்டு வந்துள்ள திட்டங்கள் அனைத்தும் முறையாக செயல்படுத்தப்பட்டுள்ளதா, விலையில்லா பொருட் கள் மாணவர்களை சென்றடைகிறதா, குறிப்பாக மழையால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில், மாணவர்களுக்கு புத்தகங்கள், சீருடைகள் முறையாக சென்றடைந்துள்ளதா என்பது குறித்தும் இந்த ஆய்வுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

அனைத்து மாவட்டத்தில் உள்ள மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள், அந்தந்த மாவட்டத்தில் உள்ள பள்ளிகளை மேம்படுத்துவதற்கு, பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். வருகின்ற மார்ச் மாதத்தில் பொதுத்தேர்வு நடைபெறவுள்ளது. அதற்கான முன்னேற்பாடு பணிகளை மேற்கொள்ள அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. எந்த மாவட்டங்கள் சிறப்பாக செயல்படுகின்றதோ அந்த மாவட்டத்திற்கு பாராட்டுக்களையும், எந்த மாவட்டங்கள் குறைவான செயல்பாட்டினை கொண்டுள்ளனவோ அதற்கான காரணங்கள் குறித்தும், ஆய்வு செய்து, வருங்காலங்களில் அதன் செயல்பாட்டினை மேம்படுத்தி ஊக்கப்படுத்துவதற்கும், இதுதொடர்பாக அனைவரின் கருத்துக்களை பரிமாற்றம் செய்வதற்கும், சுதந்திரமாக தங்கள் கருத்துக்களை பதிவிடவும். இரண்டு நாட்கள் இந்த கூட்டம் நடத்தப்படுகின்றது.

இக்கூட்டத்தில் வழங்கப்படுகின்ற அறிவுரைகளை முதன்மைகல்வி அலுவலர்கள் , மாவட்ட கல்வி அலுவலர்கள், தங்கள் மாவட்டத்தில் உள்ள தலைமையாசிரிகளுக்கு முழுமையாக கொண்டு சேர்க்கவேண்டும்.

நடைபெறவுள்ள 10-ஆம் வகுப்பு, 12-ஆம் வகுப்பு பொதுத்தேர்வு தேர்ச்சி விகிதத்தினை அதிகரிக்கவும், தேர்ச்சி பெறாத மாணவர்களை தேர்ச்சிப்பெற செய்யவும், போதிய நடவடிக்கைகளை முதன்மை கல்வி அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும்.

அரசு நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி என அனைத்து பள்ளிகளிலும் உயர்தர ஆய்வகங்கள் கொண்டுவருவதற்கும், கணினிகளில் பழைய ஆப்ரேட்டிங் சிஸ்டம் எல்லாம் மாற்றப்பட்டு, தற்போது என்ன மாதிரி புதிய ஆப்ரேட்டிங் சிஸ்டம் பயன்பாட்டில் உள்ளதோ அவற்றை பயன்படுத்தவும், ஏற்கனவே உள்ள உயர்தர ஆய்வகங்களில் எந்த பொருட்கள் எல்லாம் அதிக நாள் பயன்பாட்டில் உள்ளதோ அவற்றிற்கு பதிலாக புதியவற்றை மாற்றவும், அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மாணவ மாணவியர்களின் பயன் பாட்டிற்கு புதிய உயர்தர ஆய்வகங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

இதுபோன்று அரசின் பல்வேறு நலத்திட்டங்களால் ஒவ்வொரு ஆண்டும் பொதுத்தேர்வில் மாணவ மாணவியர்களின் தேர்ச்சிவிகிதம் அதிகரித்துக் கொண்டு இருக்கிறது.

அரசுப் பள்ளிகள் என்பது வறுமையின் அடையாளம் அல்ல, அவை பெருமையின் அடையாளம். அதன்படி கோயம்புத்தூர் மாவட்டம், அரசூர், அரசு மேல்நிலைப் பள்ளியில் ஏழாம் வகுப்பு படிக்கும் மாணவர்கள் செல்வன். கே.ஜசக் ஜெபக்குமார், செல்வன் ஆர்.மருதீஷ், செல்வன். ஜெ.வீரமணி ஆகியோர் வடிவமைத்த பார்வை குறைபாடுள்ளவர்களுக்கான ஸ்மார்ட் வாக்கிங் ஸ்டிக் மற்றும் பார்வையற்றோருக்கான கண்ணாடி ஆகிய இரண்டு கருவிகளை வடிவமைத்து, ஒரு கல்லூரியில் நடைபெற்ற அறிவியல் கண்காட்சியில் அவற்றினை காட்சிப்படுத்தி, பரிசு பெற்றனர்.

அந்த நிகழ்ச்சி அனைத்து சமூக வலைதளங்களில் பரவி 80 லட்சத்திற்கும் அதிகமான வர்களால் பாராட்டப்பட்டு வருகிறது. இரண்டு புதிய கருவிகளின் கண்டுபிடிப்புகளை உருவாக்கிய மூன்று மாணவர்களுக்கு மனதார பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவர்கள் மட்டுமல்லாமல் ஒவ்வொரு பள்ளியிலும் உள்ள மாணவர்கள் ஏதாவது ஒருவிதத்தில் தங்கள் திறமையை வெளிப்படுத்திக் கொண்டுதான் இருக்கிறார்கள். மாணவ மாணவியர்கள், ஆசிரியர்கள், பள்ளி தலைமையாசிரியர்கள், மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள், வட்டார கல்வி அலுவலர்கள், அரசு என நாம் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்படுவதால் தான் அரசுப்பள்ளி மாணவர்களால் இதுபோன்று பல்வேறு சாதனைகள் செய்து வருகிறார்கள். இந்தப்பள்ளிக்கு மாநகராட்சி சார்பில் பொது நிதியிலிருந்து ரூ.66 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளனார். அதற்கு மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கிறேன் என பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் தெரிவித்தார்.

SCERT மூலம் நடத்தப்பட்ட மாநில அளவிலான Role Play (நாடகம்) மாநில அளவில் முதலிடத்தை கோயம்புத்தூர் மாவட்டம், அரசு உயர்நிலைப்பள்ளி காந்திமாநகர் பள்ளி மாணவர்களான கிருஷ்ணன், குகநேஸ்வரன், தருண்குமார், ஜெசிகா ஜோன், லக்கணர் ஆகியோர் பெற்றுள்ளனர். மேலும், தேசிய அளவிலான போட்டிக்கும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இந்த மாணவர்களை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பாராட்டினார்.

டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. முன்னிலை! துரை சந்திரசேகர் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

ஆவடியில் இருந்து மாநகர பேருந்து தடம் எண்.580 புதுவாயல் வரை நீட்டிப்பு!

அமைச்சர் ஆவடி.சா.மு.நாசர் கொடியசைத்து துவக்கி வைத்தார்!

கும்முடிப்பூண்டி, டிச.17-

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முடிப் பூண்டி தொகுதியில் சென்னை மாநகர போக்கு வரத்து கழகம் ஆவடி பணிமனையில் இருந்து ஆரணி வரை பேருந்து வழித்தடம் 580 பேருந்து இயக்கப்பட்டு வந்தது.

கும்முடிப்பூண்டியிலிருந்து பெரியபாளையம், திருவள்ளூர் ஆவடி செல்ல சரியான போக்குவரத்து இல்லை. இதனால் தொழிற் சாலைக்கு செல்லும் தொழிலாளர்கள் அரசு பணியாளர்கள் பள்ளி கல்லூரிக்கு செல்லும் மாணவ மாணவியர்கள், சிறு வியாபாரிகள், விவசாய பெருமக்கள் பெரிதும் அவதிப்பட்டு வந்தனர்.

இது குறித்து கும்முடிப் பூண்டி சட்டமன்ற உறுப்பினரிடம் பொதுமக்கள் வேண்டுகோள் வைத்தனர். ஆவடியிலிருந்து புதுவாயல் வரை பேருந்து இயக்கப்பட வேண்டும் என்ற பொதுமக்களின் கோரிக்கை ஏற்று அதற்கான முயற்சியில் ஈடுப்பட்டு புதிய பேருந்து வழித்தடத்தை ஆவடி.சா.மு.நாசர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

மாவட்ட செயலாளரும் கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன் மற்றும் பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை.சந்திசேகர் முன்னிலையில் நிகழ்ச்சி நடைபெற்றது.

ஆரணி பேரூந்து நிலையத்தில் பேரூர்செயலாளர் ஆரணி.பி.முத்து ஏற்பாட்டில் மற்றும் கும்முடிப் பூண்டி தெற்கு ஒன்றியச் செயலாளர் கி.வே.ஆனந்த குமார் ஏற்பாட்டில் புதுவாயல் கூட்டுச்சாலையில் பொதுமக்களுக்கு இனிப்பு கள் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் மு.பகலவன், ஜெ.மூர்த்தி, மு.கதிரவன், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, எம்.எல்.ரவி, எஸ்.ரமேஷ், பொதுக்குழு உறுப்பினர்கள் பி.வெங்கடாசல பதி, பா.செ.குணசேகரன், டாக்டர்.பரிமளம் விஸ்வநாதன், மாநில நிர்வாகிகள் கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், வெ.அன்புவாணன், கன்னிகை.ஜி.ஸ்டாலின், ஒன்றியச்செயலாளர்கள் நா.செல்வசேகரன், ஆ.சத்தியவேல், கா.சு.ஜெகதீசன், ஜான் (எ) பொன்னுசாமி, ந.பரிமளம், இரா.அறிவழகன், அபிராமி குமரவேல், க.சு.தமிழ்உதயன், அத்திப்பட்டு ஜி.ரவி, அப்துல்ரஷீத்,

அணிகளின் அமைப்பாளர்கள் வெற்றி(எ)ராஜேஷ், டி.ஜெ.ஜி.தமிழரசன், மு.பாஸ்கர், பா.தனசேகர், பழவை முகமதுஅலவி, எஸ்.கோபி, ஜி.சுமன், ஜெயலலிதாசகிதரன், தேசராணி தேசப்பன், எஸ்.ராமஜெயம், கேசவன், ஜெ.முனுசாமி, பா.முத்துசாமி, ஜி.பி.வெங்கடேசன், ஏ.சீனிவாசன், வேம்பேடு.குமார், ஆரணி பேரூர் நிர்வாகிகள் கா.ரமேஷ், டி.கோபிநாத், டி.நிலவழகன், ஜி.காரி கலன், டி.கண்ணதாசன், எஸ்.நாகராஜ், என்.பாலாஜி, கே.கவியரசன், கே.கர்ணா, கே.ஆர்.சீனு, தமிழழகன், ரகுமான்கான், சுபாஷினி,

போக்குவரத்து அதிகாரிகள் ராஜசேகர், ராம்குமார், ஹேமசந்திரன், ரமேஷ், தொ.மு.ச.கந்தசாமி, துளசி, பழனி, எம்.அருள், முகமது மொய்தீன், பி.கே.நாராயணசாமி, டி.கே.முனிவேல், பா.பரத்குமார், அப்துல்கரீம், கேசவன், சி.ஜெ.ரமேஷ், இரா.கதிரவன், கே.இ.திருமலை, கே.ஜி.நமச்சிவாயம், கே.எஸ்.சதீஷ்குமார், எஸ்.ரவீந்திரன், பா.அறிவழகன், மோ.பிரசாத், நந்தியம்.ச.கதிரவன்,

மகளிர் அணி பத்மாசீனிவாசன், பிரபாவதி, வி.சுகன்யா, ஏ.கோமளா, லட்சுமி, நிர்மலா, ஆலாடு.அமுதா, நளாயினி, ஜெயசித்ராசிவராஜ், கே.எஸ்.குமார், எல்.பி.எப்.மோகன், செல்வராஜ், கே.நரேந்திரன், போண்டாசிவா, முகிலன், பார்த்திபன், ரஹீம், எம்.துளசிராமன், அக்கரைராஜ்சித், எல்லாபுரம்.கே.ராஜேஷ், பா.வெங்கடாசலம், க.கு.அசோகன், டி.காசி, இரா.அப்புன் டி.கண்ணபிரான், சாய்சத்திய என்.ரவிசந்திரன், படைகஞ்சா பார்த்திபன், ஈஸ்வரகுமார் உள்ளிட்ட கழக முன்னோடிகள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

முரசொலி நாளேட்டின் தணிக்கையாளர்

தி.சிவசுப்பிரமணியனின் தந்தை தியாகராஜன் மறைவு!

கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, டிச.17-

'முரசொலி' நாளேட்டின் தணிக்கையாளர் தி.சிவசுப்பிரமணியன் அவர்கள் தந்தையார் வி.தியாகராஜன் அவர்கள் (வயது 100) நேற்று (16.12.2024 - திங்கட்கிழமை) இரவு இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க பெரிதும் வருந்துகிறோம்.

செய்தியறிந்ததும் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில்

முரசொலி நாளேட்டின் தணிக்கையாளர் தி.சிவசுப்பிரமணியன் அவர்களது தந்தையார் வி.தியாகராஜன் அவர்கள் உடல்நலக் குறைவால் மறைவெய்திய செய்தியறிந்து மிகவும் வருந்தினேன். அன்னாரதுமறைவிற்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது பிரிவால் வாடும் தணிக்கையாளர் தி.சிவசுப்பிரமணியன் அவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் ஆறுதல் தெரிவித்து கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தந்தையை இழந்து வாடும் தணிக்கையாளர் தி.சிவசுப்பிரமணியன் அவர்களை தொலைபேசியில் தொடர்புகொண்டுஅவருக்குஆறுதலையும் தனது அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் கனமழையின் காரணமாக வெள்ளநீர் சூழ்ந்துள்ள பல்வேறு பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டு வரும் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள், தூத்துக்குடி திருச்செந்தூர் சாலையில் உள்ள ஆத்தூர் தாமிரபரணி ஆற்றுப் பாலம், ஏரல் குரும்பூர் தாமிரபரணி ஆற்றுப் பாலம் ஆகியவற்றை ஆய்வு செய்து, ஆத்தூரில் உள்ள மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டிருக்கும் தெற்கு ஆத்தூரைச் சேர்ந்த மக்களைச் சந்தித்து அவர்களின் தேவைகளை கேட்டறிந்தார். ஆய்வின்போது, மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சரும், தூத்துக்குடி தெற்கு மாவட்ட செயலாளருமான அனிதா ஆர்.இராதாகிருஷ்ணன், மாவட்ட ஆட்சியர் இளம் பகவத், சட்டமன்ற உறுப்பினர் ஊர்வசி அமிர்தராஜ், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி,மாவட்ட பஞ்சாயத்து தலைவர் அ.பிரம்மசக்தி மற்றும் பலர் உடனிருந்தனர்.

மதுரை கோரிப்பாளையம் பகுதியில் நடைபெற்று வரும் மேம்பாலப் பணிகளை பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் பார்வையிட்டு தரக்கட்டுப்பாட்டு அறையில் கட்டுமானப் பொருட்களின் திடத்தை ஆராய்ந்தார். உடன் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி, தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன் மற்றும் அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.